மெட்ரோ ரயில் நிலையங்களில்

# இசை, கலை நிகழ்ச்சிகள் இன்று தொடக்கம்

## ● பிப்ரவரி 2-ம் தேதி வரை நடக்கிறது

■ சென்னை

தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில் மெட்ரோ ரயில்கள் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களில் இசை, கலை நிகழ்ச்சிகள் இன்று முதல் 4 நாட்களுக்கு நடத்தப்படுகிறது.

இதுதொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

**பல்வேறு அமைப்புகளுடன்..**

பல்வேறு இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மெட்ரோ நிறுவனம் சென்னை மக்களுக்காக இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக 24-ம் தேதி (இன்று) முதல் பிப்ரவரி 2-ம் தேதி வரையில் 4 நாட்களுக்கு மெட்ரோ ரயில்கள் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களில் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

அதன்படி, விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையத்தில் 24-ம் தேதி (இன்று) காலை 10 மணிக்கு ஒயிலாட்டமும், வண்ணாரப் பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில் காலை 11.30 மணிக்கு தேவராட்டம் நடக்கிறது. விமான நிலையம் - வண்ணாரப்பேட்டை இடையே செல்லும் மெட்ரோ ரயில்களில் பரத் நாராயண் குழுவினரின் கர்நாடக இசை நிகழ்ச்சியும் நடக்கிறது.

வரும் 27-ம் தேதி மாலை 5 மணிக்கு கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில் ஆன்மஜோதி அமைப்பு சார்பில் கர்நாடக 'குவார்டெட்' நடக்கிறது. சென்ட்ரல் - விமான நிலையம் வரையில் மெட்ரோ ரயிலில் வரும் 27-ம் தேதி மாலை 5 மணிக்கு இசை நிகழ்ச்சி நடக்கிறது. ஆலந்தூர் முதல் சென்ட்ரல் வரை மெட்ரோ ரயிலில் வரும் 30-ம் தேதி மாலை 5 மணிக்கு அபிஷேக்கின் ஸ்டாண்ட் அப் காமெடி மற்றும் பிந்துமாலினியின் மெல்லிசை நிகழ்ச்சி ஆகியவை நடக்கிறது. மாலை 5.45 மணி முதல் 6.30 மணி வரை சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பரத நாட்டியமும், பறையாட்டமும் நடக்கிறது.

இதேபோல், சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் வரும் 2-ம் தேதி மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை 'ஆன் தி ஸ்ட்ரீட் ஆப் சென்னை' என்ற அமைப்பு சார்பில் இசை நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.